பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் **கை ரிக்ஷா ஒழிப்பு.**



# 35 இடம் பொருள் கலைஞர்





# சைக்கிள் ரிக்ஷா

## பொன்விழா காணும் பொன்விழா புரட்சி!

அர்த்தமற்ற பிறந்தநாள் கொண்டாடும் மனிதர்களிடையே, தன் பிறந்தநாளை மனிதநேயச் செயல்களுக்காக ஒதுக்கி, தன் பிறப்பையே அர்த்தமுள்ளதாக மாற்றியவர், தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

தனது 48-வது பிறந்தநாள் முதல் ஏதேனும் ஒரு புதிய மக்கள் நலத் திட்டத்தை அறிமுகப்படுத்து வதையே வழக்கமாக வைத்திருந்தார் தலைவர் கலைஞர்.

அதன்படி, தனது 48-வது பிறந்தநாளில் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு தரும் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். பிறகு 49-வது பிறந்தநாளில் கண்ணொளித் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். அந்த வரிசையில் தன் 50-வது பிறந்தநாளில், மனிதரை மனிதர் இழுத்துச் செல்லும் மனிதாபிமானமற்ற செயலை ஒழிக்கும் விதத்தில் கைரிக்ஷாக்களுக்குப் பதிலாக, சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தினார் கலைஞர்.

1973-ஆம் ஆண்டு ஜூன் 3-ஆம் தேதி தன் பொன்விழாவைக் கொண்டாடிய கலைஞர், 5-ஆம் தேதி மாலை சென்னை, ராஜாஜி மண்டபத்துக்கு அருகிலிருந்த திடலில் நடந்த நிகழ்ச்சியில் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

### நிஜமாகிய சினிமா வசனம்

“மாடு செய்த புண்ணியம்கூட இந்த மனுஷன் செய்யலையா..? ஆமா மதராஸ்ல மனுஷன் மிருகமாத்தான் இருக்கான்... முதுகெலும்பு ஒடிய மூட்டை வண்டி இழுக்கிறானே... குதிரைக்குப் பதிலாக நரம்பு தெறிக்கத் தெறிக்க ரிக்ஷா இழுத்து கூனிப் போயிருக்கிறானே... நாயைப் போல சுருண்டு நடைபாதையில் குடும்பத்தோடு தூங்குகிறானே... அந்த நல்லவனை... நாதியற்றவனை, நாலு கால் பிராணியாய் ஆக்கப்பட்ட மனிதனைச் சொன்னேன்... சென்னை புனிதமான நகரம்... இங்கே மனிதன் மிருகம்...”

“சர்தாம் போடா... மெட்ராஸுக்கு நீ மேயரா வர்ற காலத்துல மிருகத்தை எல்லாம் மனுசனாக்கலாம்...”

இப்படி ஓர் உரையாடல் கலைஞரின் காவியமான **‘பராசக்தி’** திரைப்படத்தில் இடம்பெற்றிருக்கும். அடுத்த இருபது ஆண்டுகளில், தான் எழுதிய வசனத்தைத் தானே சட்டமாக்குவோம் என்று முத்தமிழறிஞரேகூட நினைத்துப் பார்த்திருக்க மாட்டார். ஆனால், காலம் விசித்திரமானது. யாரிடம், எப்போது, எந்தப் பணியைக் கொடுக்க வேண்டும் என்று காலத்துக்குத் தெரியும். அதைச் சரியாக உணர்ந்து கொள்கிறவர்கள் தலைவர்களாக மிளிர்கிறார்கள். அந்தக் கணத்தைத் தவறவிடுபவர்கள் தாழ்ந்து போகிறார்கள்.

கலைஞர் தன் கைகளுக்கு முதலமைச்சர் பொறுப்பு வந்தவுடன் கைரிக்ஷாவை ஒழித்து, சைக்கிள் ரிக்ஷாவை வழங்கி, அடித்தட்டு மக்களின் மாண்பைக் காப்பாற்றியது மட்டுமல்லாமல், சென்னை மாநகரத்தின் பொதுப் போக்குவரத்தையும் அடுத்த கட்டத்துக்கு நகர்த்திச் சென்ற முயற்சியாகவும் அதைக் காண முடியும்.

**மனிதரை மனிதர் இழுத்துச் செல்லும் மனிதாபிமானமற்ற செயலை ஒழிக்கும் விதத்தில் கைரிக்ஷாவுக்குப் பதிலாக, சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தினார் கலைஞர்.**

### மக்களாட்சியில் ஒரு மன்னன்!

நிகழ்ச்சிக்கு, அன்றைய கல்வித்துறை அமைச்சராக இருந்த நாவலர் நெடுஞ்செழியன் தலைமையேற்றிருந்தார். அப்போது அவர் தனது உரையில், “அக்காலத்தில் மன்னர்கள் ‘நாள் மங்கல விழா’ கொண்டாடி வந்தார்கள். பிறந்தநாள் விழாதான் அது. பிறந்த நாள் விழாவின்போது, கொடுமைகள் நீக்கப்படும், கஷ்டங்கள் தவிர்க்கப்படும், கைதிகள் விடுவிக்கப்படுவார்கள்.

காந்தியடிகளின் நூறாவது பிறந்த நாளின் போது கைதிகள் விடுவிக்கப்பட்டனர். அண்ணா அவர்களின் அறுபதாவது பிறந்த நாளின் போது கைதிகள் விடுவிக்கப்பட்டனர். அதுபோல, கலைஞர் அவர்களின் பிறந்த நாளின் போது, சமுதாயம் நன்மை பெறத்தக்க அளவுக்கு நாம் பணிகளை ஆற்றி வருகிறோம்.

கைரிக் ஷாவைப் பொறுத்தவரை, அது, மனிதனை மனிதன் வதைத்த போக்கு! சமுதாய வாழ்வை வதைத்து வந்த இந்தப் போக்கினை எண்ணிப் பலரும் கண்ணீர் வடித்தார்கள். பலர் உருகி உருகி எழுதினார்கள். ஆனால், நமது கலைஞர் அவர்கள்தான், கைரிக்ஷா இனிமேல் ஓடாது, ஓடக்கூடாது என்று ‘X’ (இன்ட்டு) குறியிட்டுக் காண்பித்திருக்கிறார்கள்” என்றார்.

### வழங்கும் திட்டம்... அகற்றும் திட்டம்..!

பிறகு சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்கி, கலைஞர் அவர்கள் பேசும்போது, “கழக அரசு அண்ணா அவர்களின் தலைமையில், 1967-இல் உருவான போது, சட்டப் பேரவையில் பேரறிஞர் அண்ணா அவர்கள், ‘இந்த அரசின் சட்டங்களாயினும், திட்டங்களாயினும், தமிழ்ச் சமுதாயத்தில் இருக்கிற ஏழை, எளிய, பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட, நடுத்தர மக்களுடைய வாழ்க்கையை மையமாக வைத்துத்தான் வகுக்கப்படும்’ என்று சொன்னார்.

அவருடைய வழிநின்று நடைபெற்ற கலைஞரின் அரசில் எந்தெந்த அளவுக்கு ஏழை மக்களுக்குத் தன்னுடைய கடமையைப் பொறுப்புணர்ந்து ஆற்ற முடியுமோ, அந்த வகையில் எல்லாம் சீராக ஆற்றியது என்பதற்கான பல சான்றுகளில் ஒன்றுதான் சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டம். இந்தத் திட்டம் உட்பட தனது பிறந்த நாளின் போது தொடங்கி வைக்கப்பட்ட வேறு பல திட்டங்களுக்கும் பொதுமக்களிடமிருந்தும், வள்ளல்தன்மை வாய்ந்த வசதி படைத்த சிலரும் கொடுத்த நிதியில் இருந்தும்தான் செயல்படுத்தப் பட்டன.

“இந்தச் சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டத்தில் ‘வழங்கும் திட்டம்’ என்று நாம் அழைத்தாலும், மனிதனை மனிதன் இழுக்கின்ற கொடுமை நிறைந்த காரியமாக விளங்குகிற அந்தக் கைரிக்ஷா கருவிகளை எல்லாம் அகற்றுகிற திட்டத்தைதான் இங்கே நாம் நிறைவேற்றவிருக்கிறோம். அகற்ற வேண்டியவற்றை அகற்ற வேண்டிய தருணத்தில் அகற்றினால்தான், அரசு நிலையானதாக இருக்கும்” என்றார் தலைவர் கலைஞர்.

மேலும் அவர், “இந்தக் காரியங்களை எல்லாம் கைம்மாறு கருதி நாம் செய்யவில்லை. நம்முடைய காரியங்களை நாம் செய்துகொண்டே போவோம். நம்முடைய பாதை நீளமானது. நம்முடைய பயணம் வெகு தொலைவில் உள்ளது. அப்பயணத்தை நடத்துகிற நேரத்தில், பாதையில் கற்கள் இடறலாம். முட்கள் குத்தலாம். காட்டாறுகள் குறுக்கிடலாம். கடும்புலிகள் சீறலாம். சிறுத்தைகள் வரலாம். சிம்மங்கள் கர்ஜிக்கலாம். ஆனால், இவற்றை எல்லாம் எதிர்த்துத்தான் நம்முடைய லட்சியப் பயணம் நிறைவேற வேண்டும்” என்றார். அப்படித்தான் இன்னும் அந்தப் பயணம் தொடர்கிறது.

➤ கைரிக்ஷாவுக்குப் பதிலாக இலவச சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டத்துக்குப் பொதுமக்கள் தங்களின் பங்களிப்பாக வழங்கிய நிதியின் அளவு ரூ.21,18,484.

➤ கைரிக்ஷாக்களை ஒழித்ததன் நினைவாக அதில் ஒன்றை, சென்னை எழும்பூரில் உள்ள அரசு அருங்காட்சியகத்தில் கலைஞர் ஆட்சியின்போது, காட்சிப் பொருளாக வைக்கப்பட்டது.

...வலம் வருவோம்

## எழுத்தாளர்களுக்கு அழைப்பு!

பள்ளிக் கல்வித் துறை சார்பில், அரசுப் பள்ளி மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்துவதற்காக, வாசிப்பு இயக்கம் என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதில் குழந்தைகளின் வாசிப்பு நிலைகளுக்கு ஏற்ப நுழை, நட, ஓடு, பற என்ற வகைகளில் ஒரு கதை, ஒரு புத்தகம், 16 பக்கம் என இதுவரை 53 புத்தகங்கள் உருவாக்கப்பட்டுப் பள்ளிக்கூடங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. அடுத்த கட்டமாக 1 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு 197 நூல்களை உருவாக்கத் திட்டமிட்டு, இதற்கான கதைகளை எழுத எழுத்தாளர்களுக்கு **‘வாசிப்பு இயக்கம்’** அழைப்பு விடுத்துள்ளது.

குழந்தைகள் எளிதில் வாசிக்கும் வகையில், சின்னச் சின்ன வாக்கியங்களில் அமைந்த நகைச்சுவை, வேடிக்கைக் கதைகளை எழுதி அளிக்கலாம். கதைகள் தேர்வாகும்பட்சத்தில் தகுந்த ஓவியங்களுடன் நூலாக்கம் செய்யப்பட்டு அனைத்து அரசுப் பள்ளி வகுப்பறைகளுக்கும், நூலகங்களுக்கும் கொண்டு சேர்க்கப்படும். ஆர்வம் உள்ள எழுத்தாளர்கள் வரும் 17 ஆம் தேதிக்குள் ssatnvit@gmail.com என்ற மின்னஞ்சலுக்குக் கதைகளை அனுப்பி வைக்கலாம். வாசிப்பு இயக்கத்துக்கு வளம் சேர்ப்போம்.

## :ப்ளாஷ்பேக்



### ஓலைக்குடிசைகளும் ஓட்டுவீடுகளும்!

சென்னை ஆயிரம் விளக்குத் தொகுதிக்குட்பட்ட டாக்டர் ராதா கிருஷ்ணன்புரத்தில் 1993-ஆம் ஆண்டு குடிசைகளை அகற்ற, ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க அரசு தீர்மானித்தது. அதை எதிர்த்து தளபதி தலைமையில், தாசில்தார் அலுவலகம் முன்பு தர்ணா போராட்டம் நடைபெற்றது. அந்நேரத்தில் மாவட்டப் பிரதிநிதியாக இருந்த என் தந்தை இரா.மாணிக்கம் அவர்களும் இப்போராட்டத்தில் பங்கேற்றார். தளபதி கலந்துகொண்ட காரணத்தால் அரசு குடிசைகளை அகற்றும் திட்டத்தைக் கைவிட்டது. 1996-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி மேயராகப் பொறுப்பேற்ற உடனே அப்பகுதியிலிருந்த குடிசைகளை எல்லாம் ஓட்டு வீடுகளாகப் புதுப்பித்துக் கொடுத்தார். என் தந்தை இப்படத்தைக் காட்டும்போதெல்லாம் தலைவர் தளபதி அவர்களின் முன்னெடுப்பில், எங்கள் பகுதியில் நடைபெற்ற ஆக்கப்பூர்வ மாற்றங்களையும் சேர்த்தே சொல்வார்.



தினேஷ்

**-தினேஷ் மாணிக்கம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர், சென்னை தென்மேற்கு மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. வாட்ஸ்அப் எண்: 90033–24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### மதுரை மாநகராட்சி!

**1971-ஆம் ஆண்டு, மதுரை நகராட்சியை மாநகராட்சியாகத் தரம் உயர்த்தினார் கலைஞர். அந்த ஆண்டு மே மாதம் ஒன்றாம் தேதி மாநகராட்சித் தொடக்க விழா நடைபெற்றது. நாவலர் தலைமை வகிக்க, கலைஞர் தொடங்கி வைத்தார். பழம் பெரும் நடிகர் டி.ஆர்.மகாலிங்கம் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினார். மாநகராட்சியின் தலைவராக இருந்த மதுரை முத்து, மாநகராட்சியின் முதல் மேயர் ஆனார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 240




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131